KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 03 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/kijts603112026.49

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

நொய்யல் நாவல் விவரிக்கும் பெரும் பஞ்சமும் உணவு பற்றாக்குறையும்

The great famine and food shortage described in the novel Noyyal

M. Dharshini[1,*], Dr. D. Christhumani[2]

[1] Ph.D Research scholar (FullTime) (BDU), Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirapalli 620017

[2] Assistant professor, Department of Tamil, Bishop Heber College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Tiruchirapalli 620017

***Corresponding author:** M. Dharshini, dharshinimano2001@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 22 October 2026
Revised: 28 October 2026
Accepted: 30 October 2026

Article ID
KIJTS-2026-0024

Peer review
Double-blind peer review

Keywords
DevibharathiThe great famine and food shortage described in the novel Noyyal

ABSTRACT

Many novels have been written against the backdrop of the great famine that occurred in Tamil Nadu in the seventeenth and eighteenth centuries. Devi Bharathi's novel Noyyal also mentions the great famine in its storyline. Set on the banks of the Noyyal, the main river flowing through the Kongu region, this novel, although full of myths and folk beliefs, meticulously records the famine that struck the region during the British rule and the lives of the people of that time. The purpose of this article is to examine the famine situation described in this novel, the food shortage, and how the people survived the famine.

How to cite this article: M. Dharshini, & Dr. D. Christhumani (2026). நொய்யல் நாவல் விவரிக்கும் பெரும் பஞ்சமும் உணவு பற்றாக்குறையும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(03), 587–597. https://doi.org/10.63300/kijts603112026.49
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ம. தர்ஷினி,

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்), (BDU 2410632781024), தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி – 620017.

முனைவர் டே. கிறிஸ்துமணி,

உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி), பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது, திருச்சிராப்பள்ளி – 620017

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்நாட்டில் பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட பெரும் உணவுப் பஞ்சத்தைப் பின்புலமாகக் கொண்டு பல நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. தேவிபாரதி எழுதியுள்ள நொய்யல் நாவலும் கதைப்போக்கில் பெரும்பஞ்சத்தினைப் பற்றிக் குறிப்பிடுகிறது. கொங்கு நிலத்தில் பாயும் முதன்மையான ஆறான நொய்யலின் ஆற்றங்கரையைக் களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இந்நாவல், தொன்மங்களும் நாட்டார் நம்பிக்கைகளும் நிறைந்ததாக இருப்பினும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவ்வட்டாரத்தைத் தாக்கிய பஞ்சத்தையும் அக்கால மக்களின் வாழ்வியலையும் நுட்பமாகப் பதிவு செய்கிறது. இந்நாவலில் விவரிக்கப்பட்டுள்ள பஞ்சக் காலச் சூழலையும், உணவுப் பற்றாக்குறையையும், மக்கள் எவ்வாறு பஞ்சத்தினைக் கடந்து வந்தனர் எனபதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வடிவங்களில் சமூக மாற்றங்களையும் சமூகச் சிக்கல்களையும் பதிவு செய்யும் முதன்மை இலக்கிய வடிவமாக நாவல்களைக் குறிப்பிட முடியும். தமிழ் நாவல்கள் பெண் விடுதலை, தேசிய விடுதலை, அகச் சிக்கல்கள், வட்டார வாழ்வியல், விளிம்பு நிலையினர் மற்றும் தலித் மக்கள் ஆகியோரின் வாழ்வியல் எனப் பல்வேறுபட்ட கதைக்களங்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இந்நாவல்களில் மக்களின் வாழ்வினைப் புரட்டிப்போட்ட பெரும்பஞ்சங்களைக் கதைக்களமாகக் கொண்டு எழுதப்பட்ட நாவல்களும் உண்டு. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தை உலுக்கிய தாது வருடப் பஞ்சக் கால வாழ்வியலை சு. வெங்கடேசன் எழுதியுள்ள காவல் கோட்டம் நாவல் விரிவாகப் பதிவு செய்துள்ளது. இதே போல, ஜெயமோகன் எழுதியுள்ள வெள்ளை யானை நாவலும் பஞ்சக் காலத்தை களமாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. இரா. முத்துநாகு எழுதிய சுளுந்தீ நாவலும் பஞ்சக் காலத்தில் பொதுமக்கள் எதிர்கொண்ட உணவுப் பற்றாக்குறையையும் துயரங்களையும் சுட்டிச் காட்டுகிறது. இவ்வரிசையில், கொங்கு நிலத்தில் வாழ்ந்த நொய்யல்வாசிகள் வாழ்வியலைக் களமாகக் கொண்டு எழுத்தாளர் தேவிபாரதி அவர்களால் எழுதப்பட்டுள்ள நொய்யல் நாவலும் பஞ்சத்தைப் பற்றியும் பஞ்சக் காலத்தில் நிலவிய சமூகச் சூழ்நிலைப் பற்றியும் குறிப்பிடுகிறது. இந்நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ள பஞ்சக் காலம் பற்றியும் இப்பஞ்சம் ஏற்படுத்திய தாக்கங்களைப் பற்றியும் சமூகவியல் நோக்கில் விளக்கியுரைப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

நொய்யல் நாவலும் கதைக்களமும்

கொங்கு நிலத்தில் பாயும் முதன்மையான ஆறு நொய்யல். தற்காலத்தில் சாயப்பட்டறைக் கழிவுகளால் மாசுபடுத்தப்பட்டு மிகவும் மோசமான நிலையில் உள்ளது. ஆனால், முன்பு இவ்வாறு செழுமையான வேளாண்மை நிலங்களை

உருவாக்கிய ஆற்றுப் படுகையாக நொய்யல் காணப்பட்டது. இவ்வகையில், நொய்யல் ஆற்றின் பழைய வரலாற்றை இந்நாவல் மீட்டெடுக்கிறது எனவும் கூறலாம். நொய்யல் ஆற்றங்கரையில் வாழ்ந்த ஒரு நிலக்கிழார் குடும்பத்தின் நூற்றாண்டுக் கால வாழ்க்கையையும் வீழ்ச்சியையும், சாதியச் சமூகத்தின் சிக்கல்களோடு நுட்பமாக விவரிக்கிறது நொய்யல் நாவல்.

வெடத்தலாங்காடு எனும் கிராமத்தின் காவல் தெய்வமான தேவனாத்தாளின் கதையோடு தொடங்குகிறது நாவல். ஊர் மக்கள் தன்னைப் புறக்கணித்ததால் சினமுற்ற தேவனாத்தாள், நொய்யல் ஆற்றை ஊருக்குள் ஏவி ஊரையே அழிக்கிறாள் என்ற தொன்மம் நாவலின் தொடக்கமாக அமைகிறது. குமாரப் பண்டிதன், காரிச்சி, சென்னி மூப்பன், கிரிக்கவுண்டன் என்கிற வெள்ளியங்கிரி, வேம்பன கவுண்டர், அவரது மனைவி சாமியாத்தாள், மகன் பூபதி, செலம்பா முதலான பல கதைமாந்தர்களின் வழியாக நாவலின் கதை விரிகிறது. மனிதர்கள் மட்டுமன்றி நொய்யல் ஆறு, சூறைக்காற்று, பாம்பு, நாய், மீன் போன்றனவும் இந்நாவலில் கதைமாந்தர்களாக காணப்படுகின்றன.

இவ்வாறு தொன்மங்களும் நாட்டார் நம்பிக்கைகளும் நிறைந்த இந்நாவலில் கொங்கு வட்டார மக்களின் மொழி, பண்பாடு, நம்பிக்கைகள், சாதிய உறவுகள் ஆகியன மிகவும் நுட்பமாக பதிவு செய்யப்பட்டுள்ளன. நாவலின் கதை பல்வேறு காலக்கட்டத்தினை பதிவு செய்கிறது. இக்கதைப்போக்கின் ஊடாக ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நொய்யல் வட்டாரத்தைத் தாக்கிய பஞ்சமும், அக்காலத்தில் மக்கள் எதிர்கொண்ட வாழ்வியல் நெருக்கடிகளும் இந்நாவலில் சுட்டப்பட்டுள்ளன. இந்நாவலில் இடம்பெறும் பஞ்சக் காலத்தினை விளங்கிக் கொள்ள, பஞ்சம் குறித்த சமூகவியல் பார்வையை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

சமூகவியல் அணுகுமுறையும் பஞ்சமும்

பஞ்சம் என்பதை நீண்ட காலமாக நிலவும் வறட்சி எனவும் இதைத் தொடர்ந்து நிகழும் உணவுப் பற்றாக்குறை மற்றும் ஊட்டச்சத்து குறைபாடு என வரையறுக்கலாம். நீண்ட பஞ்சமானது கொலை, கொள்ளை போன்றவற்றையும் தோற்றுவிக்கிறது. ஓர் இலக்கியம் தோன்றிய சமூகப் பின்புலத்தையும், அவ்விலக்கியத்தில் பதிவாகியுள்ள சமூகச் சூழல், சமூக மதிப்புகள், சமூக மாற்றங்கள் ஆகியவற்றையும் ஆராய்வதே சமூகவியல் அணுகுமுறை. ஒரு சமூகத்தின் வாழ்வியலைப் பெரிதும் பாதித்த பஞ்சம் போன்ற பேரிடர்கள் இலக்கியத்தில் எவ்வாறு பதிவாகியுள்ளன என்பதை ஆராய்வது கூட சமூகவியல் அணுகுமுறையின் ஒரு பகுதி எனலாம். பஞ்சம் மழையின்மையால் ஏற்படும் இயற்கையான நிகழ்வு மட்டுமன்று; சமூகத்தின் அடிப்படைகளையே அசைக்கும் நிகழ்வாகவும் அது அமைகிறது. இதனை கே. வருசக்கனி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

வறட்சி என்பது சாதாரண இயற்கை நிகழ்வு மட்டுமல்ல. அது சமூகத்தின் அமைப்பையும், அதன் பாரம்பரியங்களையும், நம்பிக்கைகளையும் பாதிக்கும்

ஒரு கலாச்சார அதிர்வாகும். வறட்சியால் ஏற்படும் நீர் பற்றாக்குறை மற்றும் அதன் விளைவுகள் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கின்றன.[1]

பஞ்சத்தால் ஏற்படும் உயிரிழப்புகளும் கொள்ளை நோய்களும் உடனடி விளைவுகள் எனக் குறிப்பிடலாம். ஆனால், அதன் ஆழமான தாக்கமானது சமூகத்தின் மதிப்புகளில் வெளிப்படுகிறது. இவற்றை பஞ்சத்தை அடுத்து நிகழும் உணவுப் பற்றாக்குறை, கொலை, கொள்ளை போன்றவற்றின் மூலம் புரிந்து கொள்ளலாம். இதுமட்டுமின்றி இது போன்ற பஞ்சங்கள் வந்த போது தானியங்கள் விலை உயர்வும் நிலைமையை மேலும் சிக்கலாக்கியதை எஸ். சிவகுமார் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

தானியப் பஞ்சம் ஏற்பட்டதும் பீதியின் பிடியில் சிக்கிய மக்களிடையே அவர்களின் பயத்தை அதிகரிக்கச் செய்யும் வதந்திகள் காட்டுத் தீ போலப் பரவின. இதன் விளைவு, தானியக் கொள்ளைகளும், கலவரங்களும். கலவரங்களுக்கு வதந்திகள் மட்டுமே காரணமல்ல. வியாபாரிகள் தானியங்களைப் பதுக்கியதும், விலையைச் சுமார் பத்து மடங்கு அதிகரித்ததும் காரணங்களே.[2]

என்று சுட்டுகிறார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலப் பஞ்சங்கள் இயற்கைச் சீற்றத்தால் மட்டும் நிகழ்ந்தவை அல்ல. பஞ்ச காலத்திலும் ஆங்கிலேய அரசின் வரி வசூலும் உணவு தானிய ஏற்றுமதியும் குறையாமல் தொடர்ந்தன. இவை உருவான பஞ்சங்கள் என்பதனை விட ஆங்கிலேய காலனித்துவ அரசால் உருவாக்கப்பட்டவை என்றுக் குறிப்பிடுவது கூட மிகப் பொருத்தமாக அமையும். இதனை அ. முத்துக்கிருஷ்ணன் அவர்களின் சொற்களின் வழியே உறுதி செய்யலாம்.

வரலாறு நெடுகிலும் பஞ்சங்கள் இயற்கையால் தொடங்கப்பட்டு அரசுகளால் நிகழ்த்தப்பட்டவையே.[3]

இது போன்ற பஞ்சங்கள் ஏற்படும் போது, பஞ்சத்தின் சுமை சமூகத்தின் எல்லாத் தரப்பினர் மீதும் சமமாக இருந்தது என்றுக் கூற முடியாது. பசி, கொலை, கொள்ளை, உணவுப் பொருட்கள் விலையேற்றம் ஆகியவை ஏழைகளையே பெரிதும் பாதித்தன.

இவ்வகையில், பஞ்சம் எனும் நிகழ்வு ஒரு சமூகத்தின் உணவு, பொருளாதாரம், சாதிய உறவுகள், மதிப்புகள் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கங்களைச் சமூகவியல் நோக்கில் ஆராய்வது மிகவும் அவசியமாகிறது.

பெரும்பஞ்சமும் தமிழ் இலக்கியப் பதிவுகளும்

பஞ்சம் பற்றிய பதிவுகள் தமிழ் இலக்கியத்தில் சங்க காலம் முதலே காணப்படுகின்றன. பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பஞ்சங்களைப் பற்றியும் பக்தி இலக்கிய குறிப்புகளின் வழியே அறிய முடிகிறது. காலனித்துவ ஆட்சிக் காலத்தில் 1876 - 1878 ஆம் ஆண்டுகளில் தென்னிந்தியாவைத் தாக்கிய தாது வருடப் பஞ்சம் தமிழ் மக்களின் நினைவில் ஆழமாகப் பதிந்துள்ளது. இப்பஞ்சத்தைப் பற்றி அக்காலத்திலேயே சில சிற்றிலக்கியங்கள் தோன்றின என்பதையும் அறிய முடிகிறது.

பருவத சஞ்சீவி என்னும் மலைமருத்தன் என்பவரால் 1877 ஆம் ஆண்டு இயற்றியதாகக் கருதப்படும் தாது வருஷக் கரிப்புக் கும்மி, பஞ்சத்தின் காரணமாக காஞ்சிபுரப் பகுதி மக்கள் பட்ட அல்லல்களையும் அறநெறிகளின் வீழ்ச்சியையும் விவரிக்கிறது. இது போல, வில்லியப்ப பிள்ளை இயற்றிய பஞ்சலட்சணத் திருமுகவிலாசம், அழகிய சொக்கநாத பிள்ளை இயற்றிய காந்திமதியம்மை கலித்துறை அந்தாதி ஆகிய நூல்களும் தென்மாவட்ட மக்கள் தாது வருடப் பஞ்சத்தால் அடைந்த துன்பங்களைப் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம் ஆகியவற்றைப் போல நவீன இலக்கியத்திலும் பஞ்சம் குறித்த தகவல்கள் இடம்பெற்றுள்ளன. இதனை,

கோபல்ல கிராமம், அஞ்ஞாடி ஆகிய நாவல்களிலும் தாது வருட பஞ்சம் குறித்த தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.[4]

என கே. வருசக்கனி தனது ஆய்வுக் கட்டுரையில் சுட்டிக் காட்டுகிறார். இவை மட்டுமின்றி காவல் கோட்டம், வெள்ளை யானை, சுளுந்தீ ஆகிய நாவல்களும் பஞ்சக் காலத்தில் நிலவிய சமூகச் சூழலினைப் பதிவு செய்துள்ளன. இப்பின்னணியில், நொய்யல் நாவலில் விவரிக்கப்பட்டுள்ள பஞ்சக் காலத்தைப் பற்றிய பதிவுகளை ஆராய்வதன் வழியே கொங்கு நிலத்தில் பெரும்பஞ்சம் எவ்வகையான தாக்கத்தினை ஏற்படுத்தியது மக்கள் அதனை எவ்வாறு எதிர்கொண்டனர் என்பதை அறிய முடியும்.

நொய்யல் நாவலில் பஞ்சத்தின் அறிகுறிகள்

நொய்யல் நாவலின் கதைக் களமானது நொய்யல் ஆற்றின் வளமான ஆற்றுப்படுகை. மிகவும் வளம் கொழிக்கும் இந்நிலத்தில் வேளாண்மை, மேய்ச்சல், மீன்பிடித்தல், பனைபடு பொருள்களைச் சேகரித்தல் என பல்வேறு தொழில்கள் நடைபெற்றன. நொய்யல் ஆறு வற்றும் காலத்தையும் வெள்ளம் பெருக்கெடுக்கும் காலத்தையும் அறிந்தவர்கள் நொய்யல்வாசிகள். இது போன்ற வளமான நிலத்தில் பஞ்சம் நிகழும் என்பதை நொய்யல்வாசிகள் யாரும் கற்பனைக் கூட செய்ததில்லை. நொய்யல் நாவலில் பஞ்சம் ஒரே நாளில் தோன்றியதாக விவரிக்கப்படவில்லை. இயற்கையில் தென்படும் சிறு சிறு மாற்றங்களின் வழியாக அதன் வருகையை பழநி மூப்பன் தான் முன்கூட்டியே உணர்ந்து கொள்கிறார். இளமையில் முன்பு தான் அனுபவித்த பஞ்சத்தின் நினைவுகளைக் கொண்டு தனது மனைவியை எச்சரிக்கிறார்.

முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்னால் வாலிபத்தில் தாங்கள் அனுபவிக்க நேர்ந்த கொடிய பஞ்சத்தின் விளைவுகளை நினைவூட்டினான். கிழவியும் பயந்து போனாள். ஆற்றின் சுனைகள் ஒவ்வொன்றாக வற்றிக்கொண்டு வருவதை அவள் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். பாளைகள் சும்பி தெளுவூற்றம் குறைந்துகொண்டே வந்தது. மூப்பன் சொன்னது போல மிக மோசமான காலம் நெருங்கி வந்துகொண்டிருப்பதற்கான துல்லியமான தடயங்கள் தென்பட்டன.[5]

ஆற்றின் சுனைகள் வற்றுவதும் பனம்பாளைகளில் தெளுவூற்றம் குறைவதும் பஞ்சத்தின் முன்னறிவிப்புகளாக அமைகின்றன. நொய்யல் ஆற்றுப் படுகையின்

ஆழமான பகுதியான மருதங்குழி கூட பஞ்சக்காலத்தில் வறண்டு விடுகிறது. ஆற்றின் வண்ணாமடையைத் தவிர வேறெங்கும் நீரில்லாத நிலையையும் நாவல் பதிவு செய்கிறது.

பெரும்பஞ்சமும் உணவுப் பற்றாக்குறையும்

பெரும்பஞ்சம் நெருங்கும்போது கிராமத்தின் உணவுச் சேகரிப்பும் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவதை நாவலின் வழி அறிய முடிகிறது. பழநிமூப்பன் வீட்டிற்கு உறவுமுறையின் அடிப்படையில் தானியம் கேட்டு வருவோரிடம் தானியம் இல்லை என்றுக் கூறி பழநிமூப்பன் மனைவியால் மறுக்க முடியவில்லை. தங்களுக்கே தானியம் இல்லாதச் சூழலில் உற்றார் உறவினர் வந்தால் அவர்களுக்கு வழங்கியே ஆக வேண்டிய சூழலையும் நாவலின் பின்வரும் பகுதி விவரிக்கிறது,

எங்க, மேலயும் கீழயும் எறச்சு இப்ப எங்கு வயித்துக்கே தாளம் போடுமாட்ட இருக்குது. பெத்துப் பெறப்பு வந்தா உரிமையா கொண்டு போயிருதுக, வேண்டாமுன்னா சொல்ல முடியுமாஞ் சொல்லுங்கொ?[6]

கருணை உள்ளங்கொண்ட மூப்பனின் மனைவி, கண்ணீருடன் தேடி வருவோருக்குக் கணவனுக்குத் தெரியாமல் கொஞ்சம் சாமையைக் கொடுத்தனுப்புகிறாள். ஆனால் வரவிருக்கும் பஞ்சத்தின் கொடுமையைப் பற்றி பழநிமூப்பன் எச்சரித்த பிறகு தனது உதவும் மானபான்மையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்கிறாள்.

பிறகு அவள் சூதானமாக இருக்கப் பழகிக்கொண்டாள். ஓரம்பரை உற்றார்களைச் சாப்பிடச் சொல்லி உபசரிப்பதைக்கூடக் கட்டுப்படுத்திக்கொண்டாள். கையிருப்பில் உள்ள இரண்டு மூட்டை சாமையும் தீர்ந்துபோய் விட்டால் பிறகு பட்டினி கிடக்க நேருமோ என்னும் பயம் அவளைப் பிடித்துக்கொண்டது.[7]

பஞ்சத்தின் காரணமாக ஏற்படப் போகும் உணவுப் பற்றாக்குறை பற்றிய அச்சத்தால் உற்றார் உறவினரை விருந்தோம்பும் பண்பும் குறைவதை நாவல் பதிவு செய்கிறது. சேமித்து வைத்து இருக்கும் சாமையையும் திருடர்கள் கொள்ளையடித்துவிடுவார்களோ என்ற கவலையோடு, மூப்பன் சாமையைப் பதுக்கி வைத்த இடத்தின் மீது தனது கயிற்றுக் கட்டிலிலைப் போட்டு படுத்துக்கொள்கிறான். புதைத்து வைக்கப்பட்ட தானியத்தைப் பாதுகாக்கும் செயலாக இது அமைகிறது. பெரும்பஞ்சங்கள் மக்களிடையே நிலவும் நம்பிக்கையினைக் குலைக்கிறது. அச்சத்தையும் சுயநல உணர்வையும் வளர்க்கிறது.

பஞ்சக் காலத்தில் தானியங்கள் இன்றி மக்கள், இதுவரை தாங்கள் சாப்பிட்டு பழகியிராத உயிரினங்களையும் கொன்றுண்ணும் நிலைக்குச் செல்கின்றனர். இறைச்சிக்காக காகம், ஓணான் ஆகிய உயிரினங்களைக் கொன்று உண்ணுவதைப் பின்வரும் உரையாடல் சுட்டிக் காட்டுகிறது.

"அல்லா சட்டீல போட்டுத் தின்னுக்கிட்டிருந்தானுக. கேட்டதுக்குக் கோழிச்சேவலுனானுக. இந்தப் பஞ்சத்துல கோழிச் சேவலுக்கு எங்க

போனானுகன்னு ரோசன பண்ணிக்கிட்டு இந்தப் பக்கமா வாறெ. ஒரே காக்காப் பொங்காக் கெடக்குது."

"தெக்க எங்கயோ ஓடக்காயத் திங்கறானுகளாமா"[8]

இவ்வாறு பஞ்சக் காலம் உணவுப் பற்றாக்குறையை தீவிரப்படுத்தியதை நாவலின் வழி அறிய முடிகிறது. இவர்களைப் போலவே ஊரில் உள்ள மூப்பன்கள் சிறு சிறு மீன்களை வேடையாடி அவற்றை மட்டுமே சுட்டும் வறுத்தும் தின்று வந்ததையும் நாவல் விவரிக்கிறது.

பெரும்பஞ்சமும் உணவுப்பகிர்வும்

பெரும்பஞ்சம் ஏற்படும் காலங்களில் சமூக மதிப்புகள் சிதைவது பற்றி முன்பு குறிப்பிடப்பட்டது. அது போலவே, சில நேரங்களில் மனித நேயத்தையும் மாண்பிணையும் வெளிப்படுத்தும் சூழலையும் பஞ்சக் காலங்கள் ஏற்படுத்தி விடுவதையும் காணமுடிகிறது. தற்காலங்களிலும் பேரிடர்களின் போது சாதி, சமயங் கடந்து உதவும் மனித மாண்புகள் வெளிப்படுவதை காண முடிகிறது. ஊரில் உள்ள மூப்பன்கள் தானியம் முற்றிலும் தீர்ந்து போய்விட்டத பிறகு பழநி மூப்பனிடம் போய் கேட்கின்றனர். அதற்கு பழநி மூப்பன் ஆற்றும் எதிர்வினையும் மிகச்சிறப்பாக நாவலில் படைக்கப்பட்டுள்ளது.

பிறகொரு நெடிய பெருமூச்சுடன் எழுந்து வீட்டுக்குள் போனான் பழனி மூப்பன். அவள் பின் தொடர்ந்து வந்துநின்றாள். கட்டிலை நகர்த்திவிட்டுத் தரையைக் கிளறினான் மூப்பன். சாமைகள் நிரம்பிய பானைகளில் இரண்டை வெளியிலெடுத்து வைத்துவிட்டுப் பெண்டாட்டியின் சலனமற்ற முகத்தைப் பார்த்தான்.

குடுங்கொ... மண்ணுக்குள்ள வெச்சிருந்து என்ன பண்ணப் போறொ? அல்லாருத்துக்கு ஆனது நம்முளுக்குமாவுட்டு. பகவானிருக்கறே.[9]

தான் பட்டினி கிடக்க நேருமோ என்று அஞ்சிப் பாதுகாத்த தானியத்தை அனைவருக்கும் மூப்பன் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கிறான். பழநி மூப்பனின் இச்செயலைக் கண்டு ஊரார் நெகிழ்ச்சி அடைவதையும் தேவிபாரதி தனது நாவலில் பின்வருமாறு சுட்டிக்காட்டுகிறார்.

இருவருமாகச் சேர்ந்து பானைகளைக் கொண்டுவந்து வாசலில் வைத்தபொழுது, எல்லோரும் திணறிப் போனார்கள். புகையிலையைத் துப்பிவிட்டு ஓடிவந்து அவன் கைகளைப் பற்றிக்கொண்டான் சீரங்கன். "அண்ணா" என்றொரு ஒற்றை வார்த்தையைச் சொல்லிவிட்டு வெகுநேரம் தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தான்.[10]

உணவுப் பற்றாக்குறை, கொலை, கொள்ளை, கலவரம் என கொடுமையான சூழல்களை பஞ்சம் உருவாக்கி இருந்தாலும், இது போன்ற மனித மாண்புகள் வெளிப்படும் சூழலும் நிலவியதை நாவலின் வழி அறிய முடிகிறது. பழநி மூப்பனின்

பகிரும் ஈகைத் தன்மையினால் ஊரார் நீண்ட நாட்களுக்குப் பின் சாமைச் சோறு சாப்பிட்டதும், பஞ்சக் காலத்தினைக் கடந்ததும் நாவலின் பிற்பாதியாக விரிகிறது.

முடிவுரை

நொய்யல் நாவல் தொன்மங்களும் நாட்டார் நம்பிக்கைகளும் நிறைந்த கதைப்போக்கினைக் கொண்டிருந்தாலும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கொங்கு வட்டாரத்தைத் தாக்கிய பஞ்சத்தையும் அக்கால மக்களின் வாழ்வியலையும் நுட்பமாகப் பதிவு செய்கிறது. ஆற்றின் சுனைகள் வற்றுதல், பனம்பாளைகளில் தெளுவூற்றம் குறைதல் ஆகிய இயற்கை அறிகுறிகளின் பஞ்சத்தை முன்னுணர்ந்ததை நாவல் சுட்டுகிறது. பஞ்சத்தின் அச்சம் உறவுமுறைக் கடமைகளையும் விருந்தோம்பல் மரபையும் சுருக்கியதையும் நாவல் பதிவு செய்கிறது. அதே வேளையில், தங்களுக்கெனப் பாதுகாத்த தானியத்தை பழநி மூப்பனும் அவரது மனைவியும் ஊராருக்குப் பகிர்ந்தளிக்கும் மனித மாண்பு வெளிப்படுவதையும் நொய்யல் நாவல் சுட்டுகிறது. இவ்வாறு, பஞ்சம் வெறும் பொருளாதார நெருக்கடியாக மட்டுமின்றி, சமூக உறவுகளிலும் சமூக மதிப்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பதையும் தேவிபாரதி எழுதியுள்ள நொய்யல் நாவல், பஞ்சம் பற்றிப் பேசும் தமிழ் நாவல்களின் வரிசையில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகிறது என்பதையும் அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. கே. வருசக்கனி, டி. தருமராஜ், தமிழ்ச்சமூகத்தில் பஞ்சங்கள் பற்றிய பதிவுகளும் அவற்றின் தாக்கமும், Indian Journal of Multilingual Research and Development, 6(1), 2025, ப. 23.
2. எஸ். சிவகுமார், தாது வருஷப் பஞ்சம், சொல்வனம், இதழ் 101, 10 பிப்ரவரி 2014.
3. அ. முத்துக்கிருஷ்ணன், தூங்காநகர நினைவுகள் – 14: தாது வருடப் பஞ்சத்தின் அவலச்சுவை!, விகடன், 20 ஏப்ரல் 2021.
4. கே. வருசக்கனி, டி. தருமராஜ், மேலது, ப. 30.
5. தேவிபாரதி, நொய்யல், நற்றிணை பதிப்பகம், 2024, ப. 292.
6. மேலது, ப. 292.
7. மேலது, ப. 292.
8. மேலது, ப. 294.
9. மேலது, ப. 295.
10. மேலது, ப. 295.

துணைநூற்பட்டியல்

- தேவிபாரதி, நொய்யல், நற்றிணை பதிப்பகம், முதல் பதிப்பு, ஆகஸ்ட் 2024.
- வருசக்கனி. க., தருமராஜ். டி., தமிழ்ச்சமூகத்தில் பஞ்சங்கள் பற்றிய பதிவுகளும் அவற்றின் தாக்கமும், Indian Journal of Multilingual Research and Development, 6(1), 2025, ப. 22–33.

- சிவலிங்கம். இரா., தென்மாவட்டப் படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருடப் பஞ்சம், தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், 20(01), அக்டோபர் 2026, ப. 27–31.
- சொல்வனம் இணைய இதழ்
- விகடன் இதழ்

References

தேவிபாரதி, நொய்யல், நற்றிணை பதிப்பகம், முதல் பதிப்பு, ஆகஸ்ட் 2024.

வருசக்கனி. க., தருமராஜ். டி., தமிழ்ச்சமூகத்தில் பஞ்சங்கள் பற்றிய பதிவுகளும் அவற்றின் தாக்கமும், Indian Journal of Multilingual Research and Development, 6(1), 2025, ப. 22–33.

சிவலிங்கம். இரா., தென்மாவட்டப் படைப்பாளர்களின் படைப்புகளில் தாது வருடப் பஞ்சம், தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், 20(01), அக்டோபர் 2026, ப. 27–31.

சொல்வனம் இணைய இதழ்